மலர் 2 இதழ் 3 ஜனவரி 2018 ISSN: 2454-3993

# கீதாரி புதினத்தின் சமூக சிக்கல்கள்

*த. கனிமொழி*
*ஆய்வியல் நிறைஞர் (தமிழ்துறை)*
*சக்தி மகளிர் அறிவியல் கல்லூரி*
*ஒட்டன்சத்திரம்*

**முன்னுரை**

இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன. காலந்தோறும் எழுதப்படுகின்ற இலக்கியங்களில் அக்கால மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு பழக்க வழக்கங்கள் போன்றன எடுத்துக் காட்டப்படுகின்றன. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிப்படி நிலைகளைக் காண இலக்கியங்களே சான்றுகளாக அமைக்கின்றன. ‘‘மனிதன் ஒரு சமூகப் பிராணி” என்ற அரிஸ்டாட்டிலின் கருத்திற்கேற்ப அவன் தனித்து இயங்க இயலாது. குடும்பம், சமூகம் என்று மற்றவர்களுடன் சேர்ந்து வாழும் இயல்புணர்ச்சி மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்துள்ளது. சமுதாயம் முற்றிலும் வளர்ச்சியடையக் குடும்பம் ஒரு அடிப்படைக் காரணியாக உள்ளது. குடும்பம் சமுதாயத்தின அடித்தளமாகக் கருதப்படுகின்றன. மனிதர்கள் வாழும் வாழ்க்கையில் பிரச்சனை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக ஆகிவிடுகின்றது. சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவது ஒரு பிரச்சனை இருந்து கொண்டுதான் உள்ளது. பிரச்சனைகளையும், இனக்குழு அழிப்பையும் ‘கீதாரி” நாவலில் ஆசிரியர் படைத்துக் காட்டுகின்றார். இந்நாவலில் காணப்படும் சமுதாயச் சிக்கல்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**கதைக்கரு**

இயற்கை மாற்றங்களையும் சீற்றங்களையும் ஒன்றே போல், வெட்ட வெளியில் எதிர்கொள்ளும் ஆட்டிடையர்களின் துயர் நிரம்பிய வாழ்க்கையைப் பேசுவதாக இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது. இப்புதினம் இலக்கியப் புலத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதற்கான காரணமாக முல்லை நில இனக்குழுவின் பண்பாட்டுப் பதிவுகளை விவரிக்கின்றது. ‘கீதாரி’ என்ற சொல் இடையர்களின் தலைவரைக் குறிக்கும். இடையர்களின் வாழ்க்கை இடர் நிரம்பியதென்றாலும் அவர்களது வாழ்க்கை அனுபவம் புதினத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றது.

கால்நடை வளர்ப்பு, மனிதனோடு தொடர்புடையதென்பதாலே இதர தொழில்களைக் காட்டிலும் மனதுக்கு நிறைவு தருவதாக அமைகிறது. பசுக்கள், எருதுகள், ஆடுகள் இவை அனைத்துமே கிராம வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தவையாக இருக்கின்றது. இடையர்கள், ஆநிரைகளைப் பராமரிப்பதும், அவற்றுடன் உரையாடுவதும், மனிதர்களுடனாக உறவை விட அதிக மகிழ்ச்சி தருவதாயிருக்கிறது என ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றனார்.

மனிதன் தன்னை அடித்தாலோ அல்லது அவமதித்தாலோ கூட பொறுத்துக் கொள்வான். அவன் வளர்க்கும் ஆடு, மாடுகளுக்குத்துன்பம் விளைவிப்பதை மன்னிக்கமாட்டான். நடைமுறையில், கோழிகளை ஆடுகளினால் ஏற்படும் பகைக்கு கொலை நிகழ்ச்சி முடிவாக அமையும் சம்பவங்கள் உண்டு. இடையன் வாழ்நாளில் பெரும் பகுதியை, ஆடுகளுடனேயே கழித்து விடுகின்றான்.

இப்புதினத்தில் மேய்ச்சல் தேடி இடப்பெயர்வு அடையும் இடையர்களின் வாழ்க்கை அனுபவங்களும், இடையர்கள் எதிர்கொள்ளும் சமூகச்சிக்கல்களும் தீர்வுகளும், கிராமத்துடனான உறவு நிலைகளும், புனையப்பட்டுள்ளது, வாசகர்களின் செக்கு மாட்டுச்சூழலில் இலக்கிய நெஞ்சுக்கு ஈர்ப்புடையதாக இப்புதினம் இருப்பதில் வியப்பதில்லை.

“பன்கா்வாடி” என்ற மாராட்டியப் புதினம் வாசகா்களின் நினைவிலிருந்து அழியாததற்கு காரணம் இடையா்களின் வாழ்க்கையை சித்தரிப்பதால் எனலாம்.

**இடையர்களின் இயற்கை வாசிப்பு**

கி.ராஜநாரயணனின் “கிடை” ஆடு மேய்க்கும் இடையா்களின் மரபுசாா்ந்த இயற்கை அறிவினை நினைவூட்டுகின்றது. பருவகால மாற்றத்தை நன்குணா்ந்த முதியவா் வரப்போகும் பஞ்சத்திலிருந்து ஆடுகளை காத்துக் கொள்ள ஆவாரம் பூச்செடிகளை மேயவிடுவதும், கடல் நீரைக்குடிக்கப் பழக்கப்படுத்துவதும் கம்மம்புல் தானியங்களை மண்ணோடு குழைத்துக் குட்டிச்சுவராக எழுப்பி ஆடுகள் குட்டிச் சுவற்றில் உராயும்போது உதிரும் தானியங்களை உணவாகுமாறு சேமிப்பதுமான பெரியவரின் இயற்கைச் செயல்பாடுகள் பிரம்மிக்கத்தக்கதாக இருக்கின்றன. இடையா்கள் பருவ காலத்திற்குத் தகுந்தாற்போல் ஆடுகளுக்கு தேவையான தீவனங்களைக் கிடைக்கும் இடங்களைத்தேடி கிடைகளைப் போட்டுக் கொள்கின்றனா். கொட்டும் மழையில் பிரப்பங்கொடிகளை அறுத்துப்போட்டு, கூளங்களில் மெத்தையில் சுகங்காணும் இடையா்களின் வாழ்க்கை பாம்புகளின் மத்தியில் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை, மனித சஞ்சாரமற்ற கடல் நடுவே தங்களின் வாழ்க்கையை ஆடுகளுக்காகவே அா்ப்பணிக்கின்றனா்.

**கதைமாந்தர்கள்**

இராமு, இருளாயி, வெள்ளைச்சாமி, கரிச்சா, சிவப்பி, சேது, ராமாயி, முத்தம்மாள், சாம்பசிவம் ஆகியோரின் பண்பு நலன்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. முதன்மைக்கதாப் பாத்திரங்களாக ராமுகீதாரி, கரிச்சா, வெள்ளைச்சாமி மூவரும் பூவிடைப்பட்ட நா;ா்போல் கதை முழுக்க விரவி நிற்கின்றனா். இவா்களை உருவி எடுத்துவிட்டால் புதினம் பொலபொலவென வெறும் சொற்களாய்க் கொட்டிவிடும்.

**ராமு கீதாரி**

கீதாரி என்ற வாா்த்தை இடையா்களின் தலைவரைக் குறிக்கும். இப்புதினத்தில் ராமு கீதாரி என்பவா் இடையா்களிலேயே பண்பட்டவராகவும், இடையா்களுக்குண்டான அனுபவ அறிவியல் முதிா்ந்தவராகவும் காணப்படுகிறான்.

“சக உயிா்களை நேசிப்பதும், அவற்றின் வலியை உணா்ந்து வேதனைப்படுவதும் நம்மில் பலருக்கு இயல்பானது தான். எவ்விதமான பலனும். சுயநலமுமின்றி பிற உயிா்களின் இன்னல் தீா;க்கத் தன்னுயிரையும் இழக்கக்கூடிய சாதாரணமான காரியமல்ல. அத்தகையதொரு கதை மாந்தரை வெகுசிலரே இலக்கியத்தில் படைத்துள்ளாா்.”

ராமு கீதாரியின் வாழ்க்கை முழுவதுமே தன் பயன் கருதாமல் பிறருக்கு உதவுகின்றான். சொத்து, சுகம் இருக்கம் பணக்கார வா்க்கங்கள் கூட செய்யத்தயங்கும் செயலை ராமுகீதாரி செய்கிறான்.

**ராமுகீதாரியின் மனித நேயம்**

யாரென்று தெரியாத பைத்தியக்கார பெண்ணின் பிரசவத்தின் போது சிக்கல் ஏற்படுகையில் மனைவியைத் துூரத்தள்ளிவிட்டு ஆடுகளுக்கு பிரசவம் பாா்த்த அனுபவத்தைத் துணையாகக் கொண்டு தன் கையைவிட்டு தலையைத்திருப்பி குழந்தையைத் தாயின் வயிற்றிலிருந்து துணிச்சலுடன் இழுத்துப் போடுவதும் இரு குழந்தைகளையும் தாங்களே வளா;க்கப் பொறுப்பேற்பதும் மனித நேயப் பண்பின் உச்சமாகும். புதினம் முழுவதும் ராமு நியாயத்துக்காகச் செயலாற்றுவதைப் பாா்க்கின்றோம். பிரச்சனைகளின் போது அவா் மேற்கொள்ளும் செயல்கள் அறம் அல்லது சமூக அக்கைறை என்ற எந்ததோட்பாட்டையும் சாா்ந்து இருக்கவில்லை. செயல்பட வேண்டியது தான் “மனித இயல்பு” என்ற வகையில் அவா் செயலாற்றுவதை உணரமுடிகின்றது. ராமு கதாபாத்திரம் முழுவதும் நம்பிக்கை உண்மையின் வழி நடப்பவாா் ஆசிரியா் புனைந்துள்ளாா்

**கரிச்சா**

ராமுவிற்கு பிறகு தலைமைப்பாத்திரமாக இருப்பவள் கரிச்சா, ராமுகீதாரியையும், கரிச்சாவையும் இக்கதையில் ஊடுருவிக் காணப்படுகின்றனா்.

இடையர்களின் வாழ்க்கையில் பெண்களுக்காக துன்பங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர். மனிதர்களான தங்களுடைய வயிறு காய்ந்தாலும் கூட ஆடுகளின் வயிறு நிறைந்திருக்க வேண்டுமென நினைக்கும் கரிச்சாவின் மனநிலையை, உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தி உள்ளனர்.

வெட்ட வெளிதனை, உலகமென நினைத்து வாழும் கரிச்சா, ஆடுகளையும் குடும்பத்தின் முக்கிய அங்கமாக நினைத்து தன் வலிகளையும், வேதனைகளையும் சொல்லிப்புலம்பும் அவலப் பெண்ணாக காட்சியளிக்கிறாள்.

**வெள்ளைச்சாமியின் குணவியல்புகள்**

அடிமையாக வாழ்ந்த தமக்கு மறுவாழ்வளித்த ராமு கீதாரியின் மேல் நன்றி கலந்த அன்பு விசுவாசமாக வெளிப்படுகின்றனர். வெள்ளைச்சாமியும் அதற்கு விதிவிளக்கல்ல. ராமு கீதாரியின் கிடைபோடும் செயலினைக் கற்று தனியாகத் தொழில் செய்யும் அளவிலான வளர்ச்சி நிலை குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுவயதிலிருந்து வளர்க்கப்பட்ட கரிச்சாவை தானே திருமணம் செய்து கொள்ளும் நிலையில் அவன் மகிழ்வடைகிறேன். வளர்ந்த பெண்ணையே கட்டி கொள்வதும், கணவன் இறந்துவிட்டால் அவனுடைய தம்பியை மணம் முடிப்பதும், ஆடு மேய்க்க பயன்படுத்தும் கைக்கம்பையே மணமகனாக நிறுவித்திருமணம் செய்து கொள்வதும் இடையர்களின் மரமாக இருப்பதை ஆசிரியர் புதினத்தின் பதிவு செய்துள்ளார். வீடுகளில்லாத காடு வாழ்க்கையில் கூட கணவன் மனைவி உறவு நிலையினை கதைப்பின்னலாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**சிவப்பி**

நிலவுடைமைச் சமூகத்தின் ஆதிக்கத்திற்கு பலி கொடுக்கப்பட்டவர்களாக உருவாக்கப்பட்ட பாத்திரம் சம்பாசிவம் பண்ணையார் சிவப்பியின் வளர்பு தந்தையாவர் இரண்டு பெண்டாட்டி கட்டியவனும் காமக் கொடூரனுமாகிய சம்பாசிவம் தன் மகளையே பாலியல் தொந்தரவு செய்து அவனின் இறப்பிற்க்கும் காரணமாகின்றான். சிவப்பியின் தற்கொலைக்கு தண்டனையோ அபராதமோ வழங்கப்படவில்லை ஏனெனின் நிலவுடைமைச் சமூகத்தின் ஆதிக்கம் திரையிட்டு காட்டப்பட்டுள்ளது.

**இருளாயி**

ராமு கீதாரியின் மனைவியான இருளாயி இழையோட்டமாக கதையில் பயணிக்கும் கதாமாந்தராக 'சாடிக்கேற்ற மூடி' என்ற பழமொழிக்கேற்ப ராமுகீதாரியின் செயல் எண்ணங்களுக்கேற்றவளாக இருக்கின்றனர். இருளாயின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் ராமுவினால், வெள்ளைச்சாமி, கரிச்சா, சிவப்பியை வளர்த்து ஆளாக்கி இருக்க முடியாது. இருவரின் மனநிலையும் ஒருமித்ததாகவே இருக்கிறது. இருளாயின் பங்கு கதைக்கு வலுசோ;ப்பதாகவும் கதைபோக்கிற்கு வடிகாலாகவும் இருக்கின்றது.

**சமூகம்**

நிலவுடமைச் சமூகத்தினால் கீதாரி இனக்குழுக்கள் பாதிப்பை அடைகின்றனர். சமூகத்தில் இப்புதினத்தின் இருப்பு என்ன? நிலவுடைமைச் சமூகத்தினால் இடையர்குலப் பெண்களின், உடல் மனரீதியான பிரச்சனைகள் பொருளாதார ஏற்றத் தாழ்வினால் இனக்குழுக்கலின் வறுமை நிலை, இனக்குழுக்குள்ளே ஏற்படும் ஒடுக்கமுறை என சமூகப் பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

**சமூகத்திற்கான விளக்கம்**

சமூகம் என்பது நிறவனங்களின் தொகுப்பு ஆகும். குடும்பமும் சமூக நிறுவனமாகும். தொழிற்கூடம் என்று சமூகத்தில் இயங்கக்கூடிய பல்வேறு துறைகளைக் குறிப்பதாகும். சமூகத்தில் குடும்பமே முதல் இயங்குதளம் ஆகும். தனிப்பட்ட நடத்தைகளே குடும்பத்தின் ஆதாரமாகும். தனிப்பட்ட நடத்தைகளின் கூட்டுத்தொகையெ சமூகமாகும். எனவே, சமூகத்தை கூடி வாழும் குழு என்று கூறுவர். மனிதன் ஒரு சமூக விலங்கு என்பது சமூகவியலாளர்களின் கருத்தாகும்.

மனிதன் சமூக அமைப்பிற்குக் கட்டுப்பட்டவனாகவே இருக்கிறான். மனிதன் தன்னைப்பேனி காத்துக்கொள்வதற்கும் அழியாமல் நிலை நிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள ஒரு மானிடக்குழு சமூகம் ஆகும். இத்தகைய சமூக உறவுகள் தான் சமூகத்தை ஏற்கின்றன. ஒத்த கருத்துக்களும் தன்மைகளும் கொண்டு கூடி வாழும் முறையே சமூகத்தின் அடித்தளமாகும்.

**சமூகச் சிக்கல்**

சமூகச்சிக்கல் என்பது மனிதக்குழுக்குழுக்கிடையே ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளும், கருத்து முரண்பாடுகளுமாகும். இது இனக்குழுக்களுக்கிடையே தோன்றி அனைத்து பிரிவினருக்குமிடையே பரவி சமூக உறவில் சிக்கல்களை ஏற்படுத்துகிறது. இதனை சமூகச்சிக்கல் என்கிறோம்.

**சமூக சிக்கல்களுக்கான காரணம்**

சமூகச்சிக்களுக்கான அடிப்படை காரணம் குடும்ப உறவிலுள்ள புரிதலின்மையேயாகும். ‘‘சமூகத்திலும், அரசியலிலும் பின்னர் ஏற்படப்போகும் பகைமை அனைத்தையும் உள்ளடக்கிய உருவமே குடும்பம் என்பது கருத்தாகும்” (பெண்ணிய நோக்கில் மேலாண்மை (பொன்னுச்சாமியின் புதினங்கள் ப.12)) கீதாரி புதினத்தில் வரும் ராமு என்பவன் தன் மனைவி இருளாயி பைத்தியக்காரப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தைகளுக்குத் தாங்கள் பொறுப்பேற்க முடியாத என்பதை கூறிவிடு என்று தன் கருத்தைச் சொல்லியதற்கு ராமு கீதாரி ‘‘வாயமூடிகிட்டு சும்மா கெடடி நாயே” பெரிசா பேச வந்துட்ட இப்பதான ஞாயங்கேட்டவமேரி” என்று இருளாயியை அதட்டினான் (கி.பி.25) இருக்கருத்தின் மூலம் பெண்களுக்கு குடும்ப உறவே முதல் எதிரியாகும். ஆசிரியர் பொன்னாச்சாரம் என்கிற புதினமும் இடையர்களின் வாழ்வு அலங்கோலங்களை கூறுவதாக இருக்கின்றது. மழை பெய்து கொண்டிருந்த சமயத்தில் வெளியே செல்ல வேண்டாம். மழை சீக்கிரத்தில் நின்று விடும் என்று கூறிய குருந்தாயியை சாத்தய்யா ‘‘புல்லு மொளக்காத கல்லடி ஒம்மனசு” (பொன்னாச்சரம் ப.40) என்று கடுமையாக கத்துகிறான். இதன்மூலம் குடும்ப உறவில் பெண் கருத்து சுதந்திரம் மறுக்கப்படுகிறது. நிலவுடைமைச் சமூகத்தின் வளா;ச்சி நிலையே இனக்குழுவின் அழிவிற்கான காரணமாக அமைகின்றது. பொருளாதார ஏற்றத்தாழ்வு, கல்வியின்மை, உலக நடைமுறைகளை அறியாதல் காடுகளையே உலகமெனக் கருதுதல் போன்றவை அவா;களின் பின்னடைவுக் காரணம் எனலாம்.

**முடிவுரை**

ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகள் ஒன்றான கீதாரி என்ற புதினத்தில் சமூகம் எத்தகைய பங்களிப்பில் நல்கியுள்ளதென்பதையும், சமூகத்தின் பங்களிப்பானது கீதாரி இன்னல்களையே செய்கிறது என்பதை இவ்வியல்பாட்டின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.